உ
சிவாய நம:



ஹாலாஸ்ய மாஹாத்ம்யத்தில் அடங்கிய

॥ वरुणकृत नमः शिवाय अष्टकम् ॥

॥ வருணக்ருத நம: ஶிவாய அஷ்டகம் ॥

தமிழ் உரை:
ஞானபாஸ்கர, சிவோத்கர்ஷவர்ஷக
பிரம்மஸ்ரீ **P.N. நாராயண சாஸ்திரிகள்**

कल्याणशैल परिकल्पित कार्मुकाय
मौर्वीकृताखिलमहोरग नायकाय ।
पृथ्वीरथाय कमलापतिसायकाय
हालास्यमध्य निलयाय नमश्शिवाय ॥ १

கல்யாணஶைல பரிகல்பித கார்முகாய
மௌர்வீக்ருதாகி2லமஹோரக3 நாயகாய ।
ப்ருத்2வீரதா2ய கமலாபதிஸாயகாய
ஹாலாஸ்யமத்4ய நிலயாய நமஶ்ஶிவாய ॥ 1

1. மேருமலையை வில்லாய்க் கொண்டு பாம்புகளின் அரசனுகிய ஆதிசேஷனை நாண் கயிராய்க் கொண்டும், பூமியை ரதமாகக் கொண்டும், லக்ஷ்மியின் கணவராகிய திருமாலை அம்பாய்க் கொண்டும் மதுரை மாநகரில் நிலை கொண்டுள்ள சிவனுகிய, ஸுந்தரேச்வரருக்கு வணக்கம்.

भक्तार्त्ति भञ्जनपराय परात्पराय
कालाभ्रकान्ति गरळांकित कन्धराय ।
भूतेश्वराय भुवनत्रयकारणाय
हालास्यमध्य निलयाय नमः शिवाय ॥ २

ப⁴க்த்தார்த்தி ப⁴ஞ்ஜனபராய பராத்பராய
காலாப்⁴ரகாந்தி க³ரளாங்கித கந்த⁴ராய ।
பூ⁴தேஶ்வராய பு⁴வனத்ரயகாரணாய
ஹாலாஸ்யமத்⁴ய நிலயாய நம: ஶிவாய ॥ 2

2. தன் பக்தர்களின் துயரைப் போக்கடிப்பவரும், எல்லாவற்றிற்கும் மேலான வரும் பிரளய காலத்தில் உண்டாகும் மேகம் போல விளங்கும் விஷத்தை கழுத்தில் கொண்டவரும் எல்லா பூதக்கூட்டங்களுக்குத் தலைவரும் மூவுலகிற்கும் காரணமான வரும் மதுரை மாநகரைக் கோயிலாய்க் கொண்ட சிவனுக்கு வணக்கம்.

भूदारमूर्त्ति परिमृग्य पदाम्बुजाय
हंसाब्जसंभव सुदूर सुमस्तकाय ।
ज्योतिर्मयस्फुरितदिव्यवपुर्धराय
हालास्यमध्यनिलयाय नमः शिवाय ॥ ३

பூ⁴தா³ரமூர்த்தி பரிம்ருக்³ய பதா³ம்பு³ஜாய
ஹம்ஸாப்³ஜஸம்ப⁴வ ஸுதூ³ர ஸுமஸ்தகாய ।
ஜ்யோதிர்மயஸ்பு²ரிததி³வ்யவபுர்த⁴ராய
ஹாலாஸ்யமத்⁴யநிலயாய நம: ஶிவாய ॥ 3

3. பூமி தேவியின் நாயகனான வராஹ உருக்கொண்ட திருமாலினால் தேடப் பட்ட திருவடியை உடையவரும். அன்னப் பக்ஷியை வாகனமாய் கொண்ட பிரம்மா வினால் தேடப்பட்டும் கிடைக்காத திருமுடியை உடையவரும், ஜோதிர்லிங்க வடிவாய்த் தோன்றித் திகழ்பவரும், மதுரை மாநகரில் உறைபவருமான சிவனை வணங்குகிறேன்.

कादम्बकाननिवास कुतूहलाय
कान्तार्धभाग कमनीय कळेभराय ।
कालांतकाय करुणामृतमागराय
हालास्यमध्यनिलयाय नमः शिवाय ॥ ४

காத³ம்ப³கானனநிவாஸ குதூஹலாய
காந்தார்த⁴பா⁴க³ கமனீய களேப⁴ராய ।
காலாந்தகாய கருணாம்ருதமாக³ராய
ஹாலாஸ்யமத்⁴யநிலயாய நம: ஶிவாய ॥ 4

4. கடம்ப மரங்களடர்ந்த காட்டில் வசிப்பதில் ஆசைப்படுபவரும், உமாதேவி யை பாதி உடலாய்க் கொண்டவரும், யமனுக்கும் யமனானவரும், கருணைக் கட லாய் விளங்குபவருமான, மதுரை மாநகரில் உறைபவருமான சிவனை வணங்கு கிறேன்.

विश्वेश्वराय विबुधेश्वर पूजिताय
विद्याविशिष्टविदितात्मसुवैभवाय ।
विद्याप्रदाय विमलेन्द्र विमानगाय
हालास्यमध्यनिलयाय नमः शिवाय ॥ ५

விஶ்வேஶ்வராய விபு³தே⁴ஶ்வர பூஜிதாய
வித்³யாவிஶிஷ்டவிதி³தாத்மஸுவைப⁴வாய ।
வித்³யாப்ரதா³ய விமலேந்த்³ர விமானகா³ய
ஹாலாஸ்யமத்⁴யநிலயாய நமः ஶிவாய ॥ 5

5. உலகிற்கெல்லாம் தலைவரும், தேவர்கள் தலைவனான இந்திரனால் பூஜிக்கப் பட்டவரும் உயர்ந்த மறையின் முடிவை யறிந்த பெரியோர்களால் அனுபவிக்கப் பட்ட ஆத்மஸ்வரூபமானவரும், படிப்பைக் கொடுப்பவரும், தூய்மையான இந்திர விமானத்தில் செல்பவரும் மதுரை மாநகரில் உறைவருமான சிவனுக்கு வணக்கம்.

संपत्प्रदाय सकलागममस्तकेषु
संघोषितात्मविभवायसदाशिवाय ।
सर्वात्मने सकलदुःख समृलहंत्रे
हालास्यमध्यनिलयाय नमः शिवाय ॥ ६

ஸம்பத்ப்ரதா³ய ஸகலாக³மமஸ்தகேஷு
ஸங்கோ⁴ஷிதாத்மவிப⁴வாயஸதா³ஶிவாய ।
ஸர்வாத்மனே ஸகலது³ःக² ஸம்ருலஹந்த்ரே
ஹாலாஸ்யமத்⁴யநிலயாய நமः ஶிவாய ॥ 6

6. செல்வத்தைக் கொடுப்பவரும், எல்லா விதமான மறைகள், கலைகளில் முடிவினால் புகழ்ந்து பாடப்படுகிற வைபவத்தை உடைய ஸதாசிவனானவரும் எல்லா வஸ்துக்களிலும் ஆத்மாவாயிருப்பவரும், துயரங்களை வேரோடு களைபவ ரும் மதுரை மாநகரில் உறைபவரான சிவனுக்கு வணக்கம்

गंगाधरायगरुडध्वज वन्दिताय
गंडस्फुरद्भुजगकुण्डलमण्डिताय ।
गन्धर्वकिन्नर सुगीतगुणात्मकाय
हालास्यमध्यनिलयाय नमः शिवाय ॥ ७

க³ங்கா³த⁴ராயக³ருட³த்⁴வஜ வந்தி³தாய
க³ண்ட³ஸ்பு²ரத்³த்³பு⁴ஜக³குண்ட³லமண்டி³தாய ।
க³ந்த⁴ர்வகின்னர ஸுகீ³தகு³ணாத்மகாய
ஹாலாஸ்யமத்⁴யநிலயாய நமः ஶிவாய ॥ 7

7. கங்கையை முடியில் கொண்டவரும் கருடனைக் கொண்ட திருமாலினால் வணங்கப் பெற்றவரும், குண்டல உருவாய் காதில் தொங்குகிற பாம்புகளின் ஒளியினால் பிரகாசிக்கிற கன்னப்பிரதேசத்தை உடையவரும், கந்தர்வர்கள் கின்னர்களினால் பாடப் பெற்ற மஹிமை பொருந்தியவரும் மதுரை மாநகரைக் கோயிலாய்க் கொண்ட சிவனுக்கு வணக்கம்.

पाणिंप्रगृह्यमलयध्वज भूप पुत्र्याः
पाण्डयेश्वरः स्वयमभूत्परमेश्वरोयः ।
तस्मै जगत्प्रथितसुन्दरपाण्डयनाम्ने
हालास्यमध्यनिलयाय नमः शिवाय ॥ ८

பாணிம்ப்ரக்³ருஹ்யமலயத்⁴வஜ பூ⁴ப புத்ர்யாः
பாண்ட³யேஶ்வரः ஸ்வயமபூ⁴த்பரமேஶ்வரோயः ।
தஸ்மை ஜக³த்ப்ரதி²தஸுந்த³ரபாண்ட³யநாம்னே
ஹாலாஸ்யமத்⁴யநிலயாய நமः ஶிவாய ॥ 8

8. பாண்டிய நாட்டின் அரசனான மலயத்வஜ பாண்டியனின் மகளான மீனாக்ஷியைத் திருமணம் செய்து கொண்டு எந்த பரமேச்வரன் தானே பாண்டிய நாட்டு அரசனாக ஆனாரோ, அந்த உலகில் புகழ் பெற்ற ஸுந்தர பாண்டியன் ஆகிய மதுரை மாநகரில் நிலைபெற்று விளங்கும் சிவனுக்கு வணக்கம்.

गीर्वाणदेशिकगिरामपि दूरगं यत्
वक्तुं महत्वमिह को भवतः प्रवीणः ।
शंभोक्षमस्व भगवच्चरणारविन्द
भक्त्या कृतां स्तुतिमिमां ममसुन्दरेश ॥ ९

கீ³ர்வாணதே³ஶிககி³ராமபி தூ³ரக³ம் யத்
வக்தும் மஹத்வமிஹ கோ ப⁴வதः ப்ரவீணः ।
ஶம்போ⁴க்ஷமஸ்வ ப⁴க³வச்சரணாரவிந்த³
ப⁴க்த்யா க்ருதாம் ஸ்துதிமிமாம் மமஸுந்த³ரேஶ ॥ 9

9. தேவகுருவாகிய பிருஹஸ்பதியின் வார்த்தைகளால் கூட வர்ணிக்க முடியாத உங்களுடைய மஹிமையை, இவ்வுலகில் சொல்லுவதற்கு எவன் திறமையுள்ளவனாவான். எல்லா உலகிற்கும் நன்மையைச் செய்கிற சம்புவே பகவானாகிய உங்கள் திருவடியில் உள்ள பக்தி காரணமாய் செய்யப்பட்ட இந்த துதியை ஏற்றுக் கொண்டு, என்னை மன்னித்தருள்வாயாக

"கீர்வாண தேசிக" என்பது தேவகுரு என்பதால் தக்ஷிணா மூர்த்தியைக் குறிப்பதாயும் கொள்ளலாம்.

“பகவான்” என்பதால் எல்லாவித சக்தியும் நிறைந்தவர் முக்கண்ணனே என்பது பெறப்படுகிறது.

“சம்பு” என்பதால் எல்லா உயிர்களை போகங்களை அனுபவிக்கும்படி செய்கிறர் என்பதும் கிடைக்கிறது.

இத்துதியிலிருந்து முக்கண்ணுகிய பரமேச்வரனே, ஈச்வரன், பகவான் என்ற பதங்களுக்குப் பொருத்தமானவர் என்றும், உலகிற்கு அப்பாற்பட்டவராயிருந்து தன் திருவடியில் உள்ளன்பு செலுத்தும் பக்த கோடிகளுக்கு எந்த விதமான வேறுபாடும் இன்றி தேவையான நன்மைகளை வாரி வழங்குபவரும் இவரே என்பதையும் உறுதி யாய்ச் சொல்லி எத்தனை தெய்வங்களிருந்தாலும் எல்லாவற்றிற்கும் மேலான தனக்கு மேலில்லாத ஒரே தெய்வம் கங்கை, பிறைச்சந்திரன் இவைகளை முடியில் கொண்டு உமையைத்தன் பாதி உடலாக்கி இவ்வுலகில் தோன்றிய ஸுந்தர பாண்டியன் எனப்பெயர் பெற்ற ஸ்ரீ மீனுக்ஷி ஸமேத ஸோமஸுந்தரக் கடவுளே என்பது மறுக்க முடியாத உண்மை. எல்லோரும் இந்த துதியை படித்து அவர் அருள் பெற வேண்டுகிறேன்.

சுபம்.
